# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

**செய்தி வெளியீட்டு எண்: 07/2020** **நாள்: 07.02.2020**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் அறிவிக்கை எண் 19/2019 ல் 2018-2019 மற்றும் 2019-2020 ஆண்டுக்கான தொகுதி-4 ல், இளநிலை உதவியாளர், நில அளவர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர், கிராம நிருவாக அலுவலர் வரித்தண்டலர், வரைவாளர் பதவிகளில் 6491 காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன.

இப்பதவிகளில் 2018-2019 மற்றும் 2019-2020 ஆண்டுக்கான காலிப்பணியிடங்களை தெரிவிக்குமாறு 06.09.2018 அன்று பல்வேறு துறைத்தலைவர்களுக்கும் இவ்வலுவலக கடிதம் வாயிலாக அறிவுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் அறிவிக்கை வெளியிடப்படும் நாள் வரையில் 6491 காலிப்பணியிங்கள் அதிகாரப்பூர்வமாக பெறப்பட்டன. சில துறைகளில் காலிப்பணியிடங்களை கணக்கிட்டு வழங்கும் பணி தாமதமானதால் அதற்காக காத்திருக்கத் தேவையில்லை என்றும் கூடுதல் பணியிடங்கள் பெறப்பட்டால் அதனை பின்னாளில் சேர்த்துக்கொள்ளலாம் என்றும் கருதி 6491 காலிப்பணியிடங்களுக்கு மட்டும் வெளியிடப்பட்டது.

ஒவ்வொரு துறையிலும் பெறப்பட்ட காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவோ அல்லது குறைக்கப்படவோ வாய்ப்புள்ளது என்பதாலும், புதிதாக பணியிடங்கள் பெறப்பட்ட வாய்ப்புள்ளது என்பதாலும், இதற்கான அறிவிக்கையில் "காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும்" என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளில் முதல் பத்தியிலேயே, தேர்வாணைய அறிவிக்கைகளில் வெளியிடப்படும் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோராயமானதாகும் எனவும் தெரிவுப்பணிகள் இறுதியாக்கப்படும் வரை அவை எந்த நேரத்திலும் மாறுதலுக்குட்பட்டதாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் அறிவிக்கையில் அறிவிக்கப்பட்ட 6491 காலிப்பணியிடங்களுக்கான தேர்வு 01.09.2019 அன்று நடைபெற்றது. இத்தேர்வில் பங்கேற்ற தேர்வர்கள் பெற்ற மதிப்பெண் பட்டியல் 12.11.2019 அன்று வெளியிடப்பட்டு தற்காலிகமாக தகுதிபெற்ற தேர்வர்கள் 05.12.2019 முதல் 18.12.2019 வரை இ-சேவை மையங்கள் மூலமாக சான்றிதழ் பதிவேற்றம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

இதனிடையே, பல்வேறு துறைகளிடமிருந்து பெறப்பட்ட கூடுதல் பணியிடங்களையும், சில துறைகளில் பெறப்பட்ட குறைக்கப்பட்ட காலிப்பணியிடங்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. 25.11.2019 அன்று 2907 கூடுதல் காலிப்பணியிடங்களையும் சேர்த்து மொத்த காலிப்பணியிடங்களின்

எண்ணிக்கை 9398 ஆக அறிவிக்கப்பட்டது இதற்கான பின்னிணைப்பு (Addendum) வெளியிடப்பட்டது.

இந்நிலையில் தற்போது கூடுதலாக 484 காலிப்பணியிடங்கள் பெறப்பட்டுள்ளன. எனவே இத்தெரிவுக்கான காலிப்பணியிடங்களின் மொத்த எண்ணிக்கை 9398 ல் இருந்து 9882 ஆக உயர்ந்துள்ளது.

இதுபோன்ற நடவடிக்கைகள், அதாவது காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை அதிகமாவதும், சில இனங்களில் குறைவதும் வழக்கமான ஒன்றுதான். இதற்கு முன்னர் நடைபெற்ற தொகுதி-1, தொகுதி-2, தொகுதி-2ஏ, ஒருங்கிணைந்த பொறியியல் பணிகளுக்கான தேர்வு என பல தெரிவுகளில் இதுபோன்ற நிகழ்வுகள் நடந்துள்ளன.

காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதென்பது, அத்தெரிவுக்கு விண்ணப்பித்த தேர்வர்களின் நலன் மற்றும் காலிப்பணியிடங்களை வழங்கிய துறையின் நலன் ஆகியவற்றின் அடிப்படையிலேயே எடுக்கப்பட்ட முடிவாகும்.

எனவே தற்போது இறுதிசெய்யப்பட்டுள்ள 9882 காலிப்பணியிடங்களுக்கான கலந்தாய்வு நடைபெறவுள்ள தேதிகள் விரைவில் வெளியிடப்படும்.

நாள்: 07.02.2020 செயலாளர்

இணைப்பு:

திருத்தப்பட்ட காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை விவரம்